FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8323722

1. District : மாவட்டம் **Tenkasi** PS: காவல்நிலையம் **Vigilance and Anti Corruption** Year: ஆண்டு **2026** FIR No.: மு.த.அ. எண் **11/2026** Date: நாள் **02.09.2026**

2. (i) Act சட்டம்: **PC Act, 1988 as amended in Act 16 of 2018.** Sections பிரிவுகள்: **7**

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **28.08.2026 17.30 hrs** Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **02.09.2026** Time : நேரம் **15.00 hrs**

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **02.09.2026** Time : நேரம் **15.00 hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் **Written**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **Kadayanallur. 15 Km North**

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **S.MURUGESAN** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **Tr.SUNDARAPANDIAN**

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **15.05.1984** (d) Nationality : நாட்டினம் **INDIAN** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம

(f) Occupation : தொழில் **FARMER** (g) Address : முகவரி **3/1 VIVEKANANDAR STREET, THIRIKOODAPURAM, CHOKKAMPATTI P.O, KADAYANALLUR TALUK, TENKASI DISTRICT.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.Vijay, Lineman, O/o Assistant Engineer, TNPDCL, Kadayanallur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 02.09.2026ம் தேதி பிற்பகல் 15.00 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் M.பால் சுதர் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சொக்கம்பட்டி அஞ்சல், திரிகூடபுரம் கதவு எண்.3/1, விவேகானந்தர் தெருவில் குடியிருந்து வரும் திரு.சுந்தரபாண்டியன் மகன் திரு.முருகேசன் என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, ரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட கடையநல்லூர் மின்வாரிய உதவிபொறியாளர் அலுவலக லைன்மேன் திரு.விஜய் பற்றியும் ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்து, புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 02.09.2026-ம் தேதி மாலை 16.30 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2026 u/s 7 of the PC Act 1988 as amended in Act 16 of 2018 என வழக்கு பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புனர் S.முருகேசன் வயது 42/26, த/பெ சுந்தரபாண்டியன், கதவு எண். 3/1, விவேகானந்தர் (தெரு), திரிகூடாபுரம்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

2/9/26

2/9/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

2.9.2026
16 HRS

Name: பெயர் M. PAUL SUTHER-
Rank: நிலை .....No. எண் .....
DSP. VMAC
Tenkasi

சொக்கம்பட்டி, கடையநல்லூர் தாலுகா. பெறுநர் உயர்திரு.துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, தென்காசி மாவட்டம். நான் கடையநல்லூர் தாலுகா திரிகூடபுரத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு கடையநல்லூர் கருப்பாநதி டேம் வைரவன் குளம் அருகே சுமார் 6½ ஏக்கர் நிலம் பூர்வீகமாகவும், கிரையத்துக்கு வாங்கியதும் எனது தந்தை பெயரில் உள்ளது. அதில் சுமார் 4 ஏக்கரில் தென்னை மரம் வைத்துள்ளேன். மீதி உள்ள இடத்தில் தென்னங்கன்று வைத்து வளர்த்து வருகிறேன். தென்னங்கன்றுக்கு கிணற்று பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்சி வருகிறேன். நீர் பாசனத்திற்கு இலவச மின்சார கனெக்சன் வாங்கியுள்ளோம். இந்த வருடம் மழை குறைவு என்பதால் கிணற்றில் தண்ணீர் கம்மியாக உள்ளது. எனது தோட்டத்திற்கு உள்ள இலவச மின் இணைப்புக்கு 3 Phase, 2 Phase என மாறி மாறி கரண்ட் வரும். 2 Phaseல் கரண்ட் இருக்கும்போது என்றைக்காவது அவசரமாக தண்ணீர் பாய்ச்ச வேண்டி இருந்தால் Condenser வைத்து மோட்டாரை இயக்கி தென்னங்கன்றுக்கு தண்ணீர் பாய்ச்சுவேன். கடந்த வாரத்தில் நான் தோட்டத்தில் நிற்கும்போது கடையநல்லூர் AE அலுவலகத்தில் லைன்மேனாக இருக்கும் திரு.விஜய் உங்கள் கிணற்றில் condenser வைத்து தண்ணீர் பாய்ச்சிருக்கீங்க, நான் போட்டோ எடுத்துள்ளேன், நான் போட்டோவை Squad-க்கு அனுப்பினால் உங்களுக்கு 1½ லட்சம் பைன் தீட்டிவிடுவார்கள், 1½ லட்சம் கொடுக்கபோறியா இல்லை எனக்கு ரூ.25,000/- தந்து வேலையை முடிக்கபோறியா என்று கேட்டார். நான் அவரசத்துக்காகத்தானே யூஸ் பண்ணியிருக்கேன், என்ன செய்யவேண்டும் என்று கேட்டபோது அவர் ரூ.25,000/- எனக்கு கொடுத்தால் நான் போட்டாவை Squad-க்கு அனுப்பமாட்டேன், இல்லையென்றால் போட்டாவை அனுப்பி விடுவேன் என்று சொன்னார். நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்று சொன்னபோது அவர் பணத்தை ரெடி பண்ணிவிட்டு சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டு சென்றார். பின்பு அவரது செல்போன் எண்.8870704405ல் இருந்து எனது செல்போன் எண்.8015726236-க்கு தொடர்பு கொண்டு பணம் ரெடியாகிவிட்டதா என்று கேட்டுவந்தார். நானும் ஏதாவது காரணம் சொல்லி சமாளித்து வந்தேன். 28.08.2026-ம் தேதி மாலை சுமார் 5½ மணியளவில் லைன்மேன் திரு.விஜய் என்னுடைய செல்போனில் பேசி என்ன நான் போன் போட்டால் கட் பண்ணி விடுகிறாய், சீக்கிரம் பணத்தை கொடு என்று சொன்னார். நான் தென்னையை யானை அழித்துவிட்டது, அவ்வளவு பணம் இல்லை, கஷ்டமாக உள்ளது, கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று

சொன்னதற்கு, பணத்தை சீக்கிரம் கொடுங்க, நாள் கடத்த கடத்த உங்களுக்குத்தான் பிரச்சினை, நீங்கள் பணத்தை கொடுத்து சீக்கிரம் முடியுங்க, இனிமேல் போன் பண்ண வைக்காதிங்க அவ்வளவுதான் நான் சொல்லமுடியும் என்று மிரட்டி பேசினார். நான் ரூ.5,000/- எப்படியாவது ரெடி பண்ணி கொடுக்க பாக்கிறேன், ரூ.5,000/- கொடுத்தால் போதுமா என்று கேட்டபோது சரி சீக்கிரம் ரெடி பண்ணிவிட்டு சொல்லுங்கள் தம்பியை அனுப்பிவைக்கிறேன், அவன்கிட்ட கொடுத்துவிடுங்க, நான் அந்த பணத்தை போல் நடுபவர்களுக்கு கொடுக்க வேண்டியுள்ளது என்று சொன்னார். 31.08.2026-ம் தேதி காலை சுமார் 10.45 மணியளவில் திரு.விஜய் எனது செல்போனில் பேசி என்னாச்சி, பணம் கொடுக்கலையே என்று கேட்டார். நான் வட்டிக்கு பணம் கேட்டுள்ளேன், இரண்டு நாளில் பணம் கிடைத்ததும் ரூ.5,000/- கொண்டு வந்து கொடுக்கிறேன் என்று சொன்னதும், அவர் திரும்ப திரும்ப கால் பண்ண வைக்காதிங்க, அடுத்த ஆளை வர வைக்காதிங்க, சீக்கிரம் பணத்தை கொடுங்கள் என்று சொன்னார். நான் நீர்பாசனத்திற்கு கன்டன்சர் பயன்படுத்தியதற்கு பைன் போட வைத்துவிடுவேன் என பயமுறுத்தி லஞ்சமாக என்னிடம் ரூ.5,000/- கேட்கும் லைன்மேன் திரு.விஜய் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒம். S.முருகேசன்) 02/09/2026.

Sir, Received the complaint on 02.09.2026 at 15.00 hrs, conducted confidential enquiry and obtained oral permission from Superintendent of Police, Southern Range, DVAC, Chennai and I registered a case in Tenkasi V&AC Cr.No.11/2026 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018 on 02.09.2026 at 16.30 hrs. Sd.02.09.2026.(M.Paulsuther), DSP, V&AC, Tenkasi.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட நீதிமன்றம், தென்காசி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

2/9/2026

M. PAULSUTHER.
DSP. VAC
Tenkasi.